(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 2 (7)]**

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2008, திசெம்பர் 22, திங்கட்கிழமை வெளியிடப்பட்டது

---

# திகதி குறிப்பிடப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 45/ '08

கௌரவ ரணில் விக்கிரமசிங்க,

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,

கௌரவ (திருமதி) ரேணுகா ஹேரத்,

கௌரவ ஜோன் அமரதுங்க,

கௌரவ ரவி கருணாநாயக்க,

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,

கௌரவ தயாசிறி ஜயசேகர,— அரசாங்கத்தின் மீது நம்பிக்கையின்மை,— அரசாங்கத்தின் அனைத்து நிதிப்பிரமாணங்களுக்கும் முரணானதும் இலங்கைக்கு முற்றிலும் பிரதிகூலமானதுமான வகையில் அரசாங்கமானது உள்நாட்டு வெளிநாட்டு வங்கிகளுட்பட அநேக வங்கிகளுடன் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தி னூடாக, மிகவும் சந்தேகத்திற்கிடமான 'ஹெட்ஜிங்' உடன் படிக்கையொன்றைச் செய்துள்ளதாலும்,

குறித்த 'ஹெட்ஜிங்' உடன்படிக்கையானது மத்திய வங்கி ஆளுநரின் விசேட ஆலோசனையின் பேரிலும் அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஒரு சமர்ப்பணத்தினாலும் செய்துகொள்ளப்பட்ட தாலும்,

உடன்படிக்கை கைச்சாத்தாவதற்கு முன் இடம்பெற்ற நிகழ்வுகளின் வரிசை குறித்து இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சு, நிதி அமைச்சு, ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மற்றும் மத்திய வங்கி ஆகியவற்றினால் முன்னுக்குப்பின் முரணான கூற்றுக்கள் வெளியிடப்பட்டுள்ளமையாலும்,

இலங்கை மொத்தமாக 25 பில்லியன் ஐ. அ. டொலர்களை பாரிய வெளிநாட்டுக் கடனாக வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியுள்ளதாலும்,

உலக சந்தையில் எண்ணெய் விலையில் ஏற்பட்டுள்ள பாரிய வீழ்ச்சியின் நன்மைகளை அனுபவிப்பதற்கு நாடு தடுக்கப்பட்டுள்ளதாலும்,

அரசாங்கம் நாட்டின் நிதிசார்ந்த செயற்பாடுகளை அறிவார்ந்த முறையில் முகாமைத்துவம் செய்ய தவறிவிட்டது என்பதை 'ஹெட்ஜிங்' உடன்படிக்கை மேற் கொள்ளப்பட்ட முறை எடுத்துக் காட்டுவதாலும் இவ்வரசாங்கத்தின் மீது இச்சபைக்கு நம்பிக்கையில்லையென தீர்மானிக்கப்படுகிறது.

---